

"மனோஜயம்"!
II
பூஜ்யஸ்ரீ சத்குரு தாளி பாபா




# "மனோஜயம்!"

இதழ் இரண்டு II

# பொருளடக்கம்


1. மனோராஜ்யம்---------------------------------------------------------68

எல்லாம் நீ!



(20) "நனவில் கனவில்லை!
"கனவில் நனவில்லை!!
"சுழுப்தியில்" இவ்விரண்டும் இல்லை.
(ஆழ்ந்த உறக்கத்தில், மேலே கூறிய இரண்டும் இல்லை)
அந்த "ஒன்றில் இம்மூன்றும்" இல்லை.

(A) நனவில் கனவு இல்லை:— நனவு எனச் சொல்லும், விழிப்பு நிலையில், "வினை" தாக்கத்தை வைத்து, வினைசம்பந்தம் கொண்ட, "தூலநாமரூப" பொருள்களை, நாம் நாடித் தேடி ஓடி, அடைகிறோம். அவ் வினைசம்பந்த, பொருள்களை, அவ் வினைசம்பந்த, ஜீவர்களிடம், கொண்டு கொடுத்தும், அவர்கள் வந்து வாங்கியும், அவர்கள் நம்மை, தேடி வந்து கொடுத்தும், நாம் தேடிப் போய் வாங்கியும், "பரிவாரனை" கணக்கு முடித்து,



பண்டம் பரிவர்த்தனம் செய்து, "வினை"களை கழித்து, நாம் களிப்பும்! சோர்வும் அடைகிறோம்.


இதில் ஆகாமியம், இருந்தால் சேர்கிறது!
,, பிராரப்தம் முடிவடைகிறது!

ஆனால் நாம் கனவில் காணும், பொருள் நனவில் வருவதில்லை.

ஆகவே இந்த நனவை, ஸ்ரீ மஹான்கள் சொல்வதாவது:— "ஜாக்ரதா! ஜாக்ரதா!"

எனச் சொல்லி, வெகு ஜாக்கிரதையாக இருங்கள் என, எச்சரிக்கிறார்கள். காரணம்:— இது வினை தொடர்புறும் கணக்காகும்! ஆகவேதான் இங்கு, நனவில் கனவு (கனவின் பொருள்) இல்லை யென்றார்கள்.


(B) கனவில் நனவு இல்லை:— கனவு எனச் சொல்லும், சொப்பனத்தில், வினையின் "கால" சஞ்சாரம் இல்லை. கனவின் பொருள்கள், நாமரூபம் கொண்டதாவ மாகத் தோற்றினாலும், விழித்தவுடன் அதை "பொய்" என, உடனே உணர முடிகிறது! இங்கு விசேஷம் என்ன வென்றால்?



நாமரூப பொருள்களும், உறவு சுற்றங்களும், மற்றும் காணும், அறிவதும், நம்மைத் "தேடி" வருகிறது. நாம் தேடிச் செல்ல வேண்டியதில்லை. நனவில் தேடும் பொருளும் தூலம்! தேடி அறியும் உடலும் தூலம்! ஆகவே "வினை" சம்பந்தம் பெருகிறது!

கனவில் வரும், பொருளும் சூட்சமம். அதை அனுபவிக்கும், மனமும் சூட்சமம். ஆகவே, "வினை" சம்பந்தம் இல்லை. ஆகவே கனவின் சம்பவமும், பொருள்களும், "விழித்த" அந்த விநாடியே பொய்யென உணர முடிகிறது.

நனவு அப்படியல்ல. காணும் பொருளும், அதையும் உடலும், தூலமாக இருப்பதாலும், "வினைகள்" நிகழ்ச்சிகளை நடைபெறுவதாலும். விழிப்பு நிலையை, உடனே பொய் எனத் தள்ள முடியவில்லை. நனவு! கனவு! இவ்விரண்டிற்கும், காரணமானது "மனமே"! ஆனால் அதனின், பொருள்களோ முறையே தூலமும்! சூட்சமமும்! ஆத்ம ஞான விசாரணையால்தான், எல்லாமே "பொய்" எனத் தள்ள முடியும்!



உ சுஷுப்தியில் இவ்விரண்டும் இல்லை - ஜாக்ரம்!
சொப்பனம், இவ்விரண்டும் மாயா "மனதின்
"விகார" குணங்களும்! "விவகார"
பிரச்சனைகளும் ஆகும்! → அதனால் வினையும்,

ஆனால், ஆழ்ந்த உறக்கத்தில், இம்மனமானது,
நம் "ஆத்மாவுடன்" சேர்ந்து இணைகிறது.
ஆனால் ஆத்மாவுடன், கலந்து மயமாக வில்லை!
திரும்பவும், வினை போகங்களை, செய்து முடிப்பதற்காக,
விழிப்பு நிலையில், சஞ்சாரம் செய்கிறது. அச்சஞ்சாரமே,
நனவில், வினைகளை தேடுவதும்; முன் தேடியதை, புசிப்பதும் ஆகும்!
கனவில் வினைகளை தேடாமலேயே, வினையின் "பாவனை"யை
T.V. காட்சி போல் மனம் காட்டுவதும் ஆகும்!
இந்த நனவும்! கனவும்! மனதால் எப்படி நடைபெறுகிறது
என்பதையே "சூக்ஷ்மமாகவும்" அதே நேரம்
ஸ்பஷ்டமாகவும் எம் ஸ்ரீ ரமண மஹரிஷி,
தம் 96 வது பாடலில், குறிப்பிடுகிறார்.

(72)



நம் ஆன்மாவும்; நம் மனமும், முறையே கணவனும் மனைவியும் என சேர்வதைப், நாமரூப, ஜக ஜீவ பொருள்கள், ஓர் தோற்ற மாத்திரமாய், தோன்றுகின்றன. உண்மை அல்ல. (ஆதலால்)

அப்பாடல்:- இருமையில்லா சுஷுப்தி நிலையில் ஏகமாக,
இருக்கின்ற ஆன்மாவே தம்மிடத்தில்,
மருவியிடும் (மாயா) சக்தியினால் கனவின் கண்ணே,
மனமதுவாய் தோற்றியும் நீடிபோல,
ஒருவடிவாய் உள்ள பரப்பிரம்மம் தானே,
ஒன்றிய தம் சக்தியினால் சித்தம் போலவாய்,
சர்வ, ஜக, ஜீவபர, வடிவமாகத்,
"ஈருமையாம்" விவகார நிலையில் தோன்றும்;
என்றார்.

சுருக்கமான உட்கருத்து;

இருமையில்லா சுஷுப்தியில், ஏகமாக இருக்கின்ற, ஆன்மாவே என்றால்?
ஆழ்ந்த உறக்கத்தில், நம் ஆன்மாவும், நம்மனமும்,
கணவனையும், மனைவியையும், உதாரணத்தில் சொல்லும் போது:- "ஈருடல் ஓருயிர்" என சொல்வதுண்டு. இதன் உட்பொருள். கணவன் மனைவி என, இரு உடல் பேதம் இருந்தாலும்,



உ


இன்பம் "ஒன்றே" எனும் பொருள்பட!

இந்த இன்பத்தை, உடலால் பெறுவது, என்றால் அது, "சிற்றின்பம்" என்றும்; இது ஸ்ரீ பகவானின் செயலே என, உணர்வாக கருதினால், அதுவே "பேரின்பம்" என்ற "பேரானந்தம்"!

என்றும், ஸ்ரீ மஹான்கள் சொல்வர், இங்கு?

அவயவங்களாக கருவியைப், மோஹம், போகம், காமம் என்னும், விஷயங்களில் (விஷத்தில்) மனம், மாட்டிக் கொள்கிறது!


"அவை, எவை?" என உணர்ந்தால், (எல்லாம் அவனே! [அவன் யாருளோ!] எல்லாம் அவன் செயலே! என அவனருமன்னம் இணைந்தால்) அங்கு மோஹம்! போகம்! காமம்! தோன்றும், அங்கு ஓர் "பரவசம்" (உடலின்பம் மறைந்து இறந்து, உணர்வானந்தம் நிறைந்து, பொங்கிடத்தும்பும்! இது இவ்வேளையின் அனுபவம்!



இருமையில்லா சுரூபநிலை! என்றால் ஆன்மாவும்
மனமும், இணைந்து பிணைந்து "ஒன்றான" நிலை.
ஏகமாக இருக்கின்ற ஆன்மாவே! என்றால்,
மனம் இணைந்த நிலையில்
அங்கு ஆன்மா மட்டுமே உளது எனும் பொருள்படும்.
அங்கு மனம், ஆன்மாவோடு, சேர்ந்து ஒன்றாகி விட்டது.
கும்மிடத்தில், மருவியதும் (மாயா) சக்தியால்,
கனவின் கண்ணே, மனமூலமாய் (கற்பனை
நாமரூபமாக) தோற்றியதும், நீங்கி போவது! என்ற
நிலையில், ஆன்மாவும் மனமும், இணைந்து பிணைந்ததனால்,
"கனவில்" "நாமரூப ஜகம், பொருள் தோன்றி
ஓர் "மயக்கத்தை" உண்டுபண்ணுகிறது.


அதேபோல்?

காலாதீத பரனும், அதன் நிழலான, யோகமாயாவும்,
சேர்ந்து இணைந்து பிணைந்ததனால், "நாமரூப"
"ஜக, ஜீவ, பர, தேவாதி யவங்கள் அனைத்தும்






தோன்றி, விகார காட்சிகளையும், விவகார
பிரச்சனைகளையும் உண்டுபண்ணி, மனமய
"சஞ்சலத்தை" உண்டுபண்ணி, சலிப்பு
அடையச் செய்து, அதனால் புண்ணிய பாபம் என்னும்
ஜனனமரண வலையில், "ஜகத்தை" உண்மையென,
நம்பும் ஜீவர்களை, ஆழ்த்திவிடுகிறது.
இங்கு சித்தமும், மனமும் ஒன்றே. அதே போல்,
ஸித்சொரூபமே, சித்தம் என ஆனது.
இங்கு மனம், புத்தி, சித்தம், இம்மூன்றும் ஒன்றே.
இதன் உண்மை எப்படியென்றால்?
மனம், புத்தி, சித்தம் என்றும், இவைகளின்,
கற்பனையான நாமரூப ஜக ஜீவ ஈஸ்வராதிகள்,
என்றும்; "மாயா" என்ற ஓர் "குட்டை"யில்
ஊறிய "அனேக மட்டைகள்" என தள்ளிவிட வேண்டும்.
ஆகவேதான் கடைசி வரியில், சொல்வது!
அந்த ஒன்றில்! இம்மூன்றும் இல்லையென்று!



அதாவது, நனவு! கனவு! சுழுப்தி! ஆகிய இம்
மூன்றிலும், எது வந்தாலும், எது நடந்தாலும்,
எது மாறியோ, மறைந்தோ போனாலும்,
இல்லை! இல்லை! இல்லை! இல்லை யென்று நீ, அப்படி
வந்ததோ, இருந்ததோ, விளையாடியதோ, மாறியதோ,
மறைந்ததோ, ஆனாலும், அவை அனைத்தும்
பரமாகிய மனதுக்கு அன்னியம் இல்லை என்றும்,
மனமாகிய, பரத்திற்கு அன்னியம் இல்லை என்றும்,
ஐக்கியமாக, உணர்ந்து விட்டால் போதும்!
அதுவே மனோ ஜயம் ஆன நிலையாகும்!

(21) யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்!
"யாமே" எல்லாம் என்ற "பர" பாவனையை
"வாக்கால்" சொன்னாலும், அந்த
"தமக்குள்" அப்பாயும் மனமானது!
அதாவது சலிக்கின்ற! சஞ்சலம் அடையும் மனமானது!
மௌனம்! மௌனம்! மௌனம்! மௌனம்! மௌனம்! மௌனம்!
அசைவற்று, பர பாவனையில், இயல்பாக நடக்கும்!





அதன் முக்கியம் என்னவென்றால்?


"வாக்கே" ஜக ஜீவ தூல நாமரூபமாகவும், சூட்சும ரூப "நாமரூ" தேவ தெய்வங்களாகவும், "மனக்" கண்களால், காணும் அவ்யக்தமாகவும், கண்டும்! கேட்டும்! பேசியும்! விளக்கங்கள், வரிவடிவிலும், ஒலிவடிவிலும், கொடுத்தும், வாங்கியும், விளம்பப்படுவதாலும்! விளங்கப் படுவதாலும்! விளக்கப்படுவதாலும்! ஓர் நிலையில், வாக்கே "ஸத்தியமாக" பிரகாசிப்பதாலும், அதாவது ஸத்திய வாக்கை தர்மம் செய்! என்பது, ஸ்ரீ மஹான்களின், அனுபவ வாக்கு! என இருப்பதனாலும், ஓர் கட்டத்தில், ஸ்ரீமஹான்கள் சொல்லும் போது,



உ



நாமரூப பொருள்களில், கர்மம் செய்வது,
பெரும்பாலும், "**புண்ணியத்தை**
**யே**" கொடுக்கும் என்றும், அது ஜனன
மரண வித்து என்றும், ஒருசில இடங்களில்,
மட்டும், அது தர்மமாக மாறுகிறது என்றும்,
"**இறை குரு**" உணர்வைப் பெருக்கும்
வாக்கும் "**பரசொரூப**" ஸ்திதியைப்
பெருக்கும் வாக்கும், பக்திய நிலையில் இருந்து
கொண்டு; ஜீவன் முக்தி என்ற, பிறவா நிலைக்கு
"**படிக்கட்டுகளாக**"
அமையும் என்றும், ஸ்ரீ மஹான்கள் சொல்லி,
வாக்குக்கே அந்த மஹத்வம் (வேகம்) கொடுக்கிறார்கள்.
மேலும்
ஸங்கல்பமே நரகம் என்றும், ஸங்கல்ப ரஹிதமே
மோக்ஷம் என்றும் சொல்லப்படுகிறது.






அதாவது, ஸங்கல்பம் என்ற, கற்பனையும். அதைச் சார்ந்த, வாக்குமே உலகமாகவும். அதன் குணதோஷங்களுக்கு, ஆதாரம் நரகம் என்றும், பேசப்படுகிறது. மேலும், வாக்கே வாழ்க்கையாக அமைகிறது. வாக்கே புண்ணிய பாபத்தை சேகரித்து, பிறவியை கொடுக்கிறது. அதே வாக்கை மனதில் ஒடுக்கி! மனதை நிச்சய்ய புத்தியில், அறிவில் ஒடுக்கி, அப்புத்தியை, ஆத்மாவில் ஒடுக்கி! ஆத்மாவை, பரமாத்மாவில் ஒடுக்க வேண்டும் என்று, சொல்லும் நிலையில், எல்லா ஸ்ரீமஹான்களும், "வாக்குக்கே" முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்த வாக்கை, லௌகீக நிலையில் இருந்து, தெய்வீக நிலைக்கும். அத்தெய்வீக நிலையில் இருந்து, "பரமார்த்த" நிலைக்கு, இட்டுச் சென்று பரமார்த்தத்தில், மௌனம் ஆகிவிடுகிறது!



யாம் பிரம்மம்! (80)
யாம் பிரம்மம்!
யாமே எல்லாம்!
என்ற இந்த **நாம்! தர்மத்**
மனம் மஹாத்மாவும் என்பது
ஸத்தியம் பேசுவதே தர்மம் நிலை
பெறும்! என்பது இன்று ஸத்தியமாகிறது! ஆகவே
இது, யத் பாவம் தத் பவதி! என்பது உறுதி ஆகிறது.

ஆக, முடிந்த முடிவாக, சொல்வது என்றால் எம் ஸ்ரீ பு மஹாத்மா, சொன்னது போல், யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்! என்ற பரபாவனையை ஜெபதாரை போல் (ஸ்மரித்தால்) "**இடையறாது**" செய்தால், மனம் அவஸ்யம், மெள்ள, மெள்ள, மெள்ள, மஹாத்மாவது "**உறுதி**" இது ஸத்தியமே! ஏன் என்றால்? ஸத்தியத்தை நோக்கி போகப் பட்டவனுக்கு, "**எந்த தடையும்**" இல்லவே இல்லை! என்று சொல்வதை விட, அங்கு தடை ஏது? செல்பவன் யார்? செல்லும் இடம் தான் ஏது? அது அதுவாகவே இருக்கிறது! அதுவாகவே நாமும் இருக்கிறோம்! நாமே அதுவாகவே இருக்கிறோம்" இங்கு தடையென்று சொல்வோம், **மனமே தடையாகும்!**




சர்வார்ப்பணபாவனை
செய்யாமலும்.
பிரம்மார்ப்பணபாவனை
ஒன்றாலே, மனத்தை
வெல்லலாம்.


மேலே சொன்ன, பரபாவனையாலும், மனத்தை வெல்லலாம்!

ஆனால் இது ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன், சாத்தியமாகும்! இது சாத்தியமாக இருந்தது!

இதைத்தான், எம் ஸ்ரீ கால தேவன், ரிஷி கேதஸ் என்ற மாணவனுக்கு சொல்லும்போது: ஆத்ம ஞானம் என்பது: "**கத்தி முனையில் நடப்பது போல் ஆகும்!**" என்றான்! அது நடக்கவோ, கடக்கவோ, சாமான்யமாக முடியாது! எனச் சொன்னான்!

ஆனால், இன்றைய, கலி யுகத்தில், இக் "**கோரமான**" குண தோஷங்கள், எல்லோரையும், பிடித்திருப்பதால், அது மிக, மிக, மிக, மிக, மிக, கடினமாகிவிட்டது.


ஆகவே, "**அன்றைய**" ஸ்ரீமான்களே! தம் அனுபவத்தில் "**இன்றைய**" சாதனைக்காக, வரிவடிவிலும், வாக்குவடிவிலும், சொல்லும்,



சர்வார்ப்பணம் :-
எல்லாம் நீயே!
எல்லாம் உன்னாலே!
எல்லாம் உனதே!

ஆன்மசாதனையானது, முன்பு படல்களில், கூறியபடி முதலில், சர்வார்ப்பணமும்! அது முடிந்த நிலையில், இலகுவாகவும்! இயல்பாகவும்! எச்சிரமமும் இல்லாமலும், யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்! என்று "பர" பாவனையாகிய; பிரம்மார்ப்பணமும்! செய்வதில், எத்தடையும் இல்லாமல், இயல்பாகவே சாத்தியமாகும் என, சான்றோர்கள் மேலே கூறிய, இவ்விருநிலைகளில், சாதனை செய்யும்போது, எல்லாம் மண்ணே! எல்லாம் மண்ணாகிய பரமே என! சாதனை செய்தால், மனோ ஜயம், இயல்பாக சாத்தியமாகும். இது இவ் வேழையின், ஸ்வய அனுபவமாகும்!

(௨௨) தனக்கு அன்னியமாய், எதுவும் இல்லையென, "கடவுணர்வு" பெற்றவனே ஞானி! அப்படி கடவுணர்வு, பெற்றவனுக்கு, எந்த "நிஷ்டா" சாதனையும் இல்லை! அது தேவையுமில்லை!





தனக்கு அன்னியம், ஏதாவது "ஒன்று" இருந்தாலும் "த்வைதபயம்" தோன்றுவது இயல்பே!

அன்னியத்திலே வரும், த்வைத பயம், தோன்ற மார்க்கமே இல்லை! இப்படி உணரலாம்!

காலாதீத பர நிலையில், இருப்பது ஒன்றே!

அதுவே, விளையாட்டின் நிமித்தம், இறை நிலையில் வரும் போது, கர்த்தாக்கள், தொழில் நிலையில், சற்று பேதமாக இருந்தாலும், "இறைவன்" என ஒருவனே!

அதைப் போலவே, "ஜீவ" நிலையில் மனிதனும். மற்றும், நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும், கிருமி கீடகங்கள், அசைந்து தாவர வர்க்கங்கள், இவை "ஸ்வாதந்த்ரியமும்" ஸ்வயம் ஜோதி சைதன்யமாய்! "ஆத்மாவாய்"!

இருப்பும் இயக்கமும் ஒன்றே! இங்கு?


குறிப்பு :- இயக்கம் என்பது மாயாவும் மாயாமனமும் ஆகும். இதை பின்னால் காண்க.



(84)

மாறுபட்டாலும்!
உற்பத்தி! இயக்கம்!
வேறுபட்டாலும்!
நிர்க்குணம்! சகுணம்!
**மாயா/மனம்!**

மாயாவும்! மனமும்! **இயக்க** நிலையில்
மாறுபட்டாலும்! வேறுபட்டாலும்! ஓர் பழமொழி
உண்டு அதன்படி, பார்க்கும் போது :- மாயாவும்மனமும்
(தாயும் சேயும், என சொல்லும் நிலையில்)
தாயும் பிள்ளையும், ஆனாலும், வாயும் வயிறும் வேறு தான்.
இந்த நிலையில் உண்டாக்குவது "**மாயா**"/ (வயிறு கர்ப்பம்)
அதுமன்றி (பேச்சு) விளங்கப்பண்ணுவதும், அதில்
மயங்குவதும்! மயங்கப் பண்ணுவதும் "**மனம்**" (வாய் என்ற வாக்கு)
ஆகவே, இங்கு தாய் இல்லாமல், பிள்ளை இல்லை என்றும்,
பிள்ளை இல்லாமல் தாய் இல்லை (தாய் ஆக முடியாது) என்றும்,
ஒன்றுபட்ட நிலையில், மாயாவும் மனமும், "**ஒன்றே**"!
இதே போல், அனைத்து ஜட, ஜீவ தாவரங்கள் என்ற, அனைத்து
நாம ரூபங்களும், "**மண்ணுக்கு**" அன்னியமில்லை
என்ற நிலையில், "**மண்**" என்ற **ஒன்றே**!
ஆகிறது!



இப்படியாக எங்கே, சுற்றி வளைத்து வந்தாலும்,
"பரமாகிய" மண் என்றும், "மண்ணாகிய"
பரம் என்றும், "எல்லாம் ஒன்று" படுவதால்
நாமே அதுவாகவும், அதுவே நாமாகவும் இருப்பதால்
நமக்கு அன்னியமான, துவைத பயம் இல்லவே இல்லை!
என்ற ஐக்கிய நிலையில், மனோஜயம் பெற்ற நிலையாகும்!
இந்த நிலை ஸ்வயமாகவும்! இயல்பாகவும்!
பெற்றவனுக்கு எந்த நிஷ்டா சாதனம்
எவையும் இல்லை என்றும், எவையும் தேவை இல்லை என்றும்,
தன்னை உணர்ந்த, ஸ்ரீமஹான்கள் சொல்ல, கேள்விப்பட்டிருக்கிறோம்.
காரணம், முன் அனேக மடங்களிலும், நேரடி
பக்த ஸங்கங்களிலும், கூறியபடி, இக்கட நாளிக்கு,
"ஆவரண" மயக்கமும் "விக்ஷேப" கலக்கமும்,
முக்காலமும், எக்காலமும் இல்லவே இல்லை! அதன் காரணம்.



ஓர் ஞானியின் (86)
நிலை, எப்படி
இருக்கும் என்றால்,
கண்! காது! வாய்!
இம் மூன்றும், அடை
பட்ட நிலையில், அவன்
கதை, பிணத்திற்கு திரு
மணம் செய்த கதை போலிருக்கும். விவகாரத்தி
ற்கு, உதவாதவன், இருந்தும் பிணமே!

மேலே கூறிய, அவ் இரண்டும், இருந்தால், அவசியம்
நிஷ்டா சாதனமும், மற்றும் சாதனைகளும் வேண்டும்.

அவ்வாறாண்டும் இல்லாத நிலையென்பது) இதிலே ஞானியானவன்!


(1) கண் இருந்தும், "குருடாய்!"
மயங்காதவராயும்,
(காட்சியில், விகார விவகாரம், இல்லாதவனாய்)

(2) காது இருந்தும், "செவிடாய்!"
(சப்தார்த்தத்தை, ஒன்று படுத்திய வனாய்)

(3) வாய் இருந்தும், "ஊமையாய்!"
(எந்த விடையும் இறை நிறு உணர்ந்தவாறு பேசுபவனாய்)
"அதுவாக இருந்தும் நாமம் ரூபமயக்கம் இல்லாதவனாய்!

(4) அவன் "இருந்தும் இல்லாதவனாய்!"
(நடைப்பிணம் போல், சஞ்சரிப்பவனாய்)


இருக்கப்பட்டவனுக்கு, சாதனை சக்தியம் எது? அது
எதற்கு? "பிணத்திற்கு மணம்"
செய்ய முடியுமா ??????????????????





23 எம் ஸ்ரீ ரிபு மஹாத்மா, அழகான ஓர் வார்த்தையை போட்டார்:- பலகால வாதனையால், "துவைதம் தானே" பரமார்த்தம் என்று, நினைவு உதித்தபோதும், ஜொல்யாத துவைத" வடிவு ஆகத்தானே, (தோற்றும்) என்றார்! இதன் உட்பொருளை, உள் ஆழ்ந்து நோக்கினால்? "பழக்க, வழக்க, தோஷம்"! என நன்றாகவே விளங்கும்!

இதை கவனிக்கவும்:- பக்தியில் உருக்கம் வேண்டும்! ஏக்கம் வேண்டும்! கண்ணீர் பெருக்கம் வேண்டும்! ஆனால் அத்வைத "ஞானத்திற்கு"! கருத்து தொருமித்த "சிரத்தையும்! ஸ்ரீஸத்குரு அருளும் வாக்கியத்தில் "நம்பிக்கையும்!" உலகம் பொய்யென பதில் "வைராக்கியமும்!"





அவஸ்யம் வேண்டும். இவைகளே பொதுவாக,
சொல்லும் போது, பக்தியில் சர்வார்ப்பணமும்,
ஞானத்தில் பிரம்மார்ப்பணமும் வேண்டுமென்று,
அனுபவ ஞானிகள் கூறுவர்.

இனி உங்கள் நிலைக்கு வருவோம்.
இதுகால பரியந்தம், யாம் கூறி வந்த, அனுபவ
பாடமானது, மனதில் தங்கவில்லையே! என்றும்,
உடல் உலக, உறவை மறக்க முடியவில்லையே! என்றும்,
குண தோஷங்கள், சாமான்யமாக, போக மாட்டேன்!
என்கிறதே என்றும், நம் சாதனை, நமக்கே தெரிய
வில்லையே! என்றும், நாம் அன்று போலத்தானே, இன்னும்
இருக்கிறோம் என்றும்,
இன்னமும், பலபல நிலைகளில், சந்தேகம்!
களங்கம்! கலக்கம்! பயம்! இருக்கத்தான் செய்யும்.
இதை கவனிக்கவும் :- அவரவர் நிலைக்குத் தக்கபடி,
20/ 30/ 40/ (வருஷ) வயதின் நிலையால், பழகிய பழக்க வழக்க,
தோஷம் 5/10/15/ வருட சாதனையால், போய்விடுமா?




அழியாதது கல்வி! (89)
அழிவது படிப்பு!
கல்வி உள் நோக்கி
செல்வதாம்! படிப்பு
பட்டம், பதவி, கௌ
ரவம், அந்தஸ்து, புகழ்
கீர்த்தி, பணம் போன்றதை
எல்லாம் மேல் நோக்கி சென்று ஓர்நாள்
அழிந்து விழுந்து சர்வநாசம் ஆகும்!

தேவையற்ற படிப்புக்கே, 20/ 30/ வருஷம் படித்து
படித்து, பட்டம் வாங்கி, வேலையும் பார்த்து,
பணம் என்றும் "மண்ணையும்"! தேடி,
(நகரம் என்பதே நரகம்)
நரகத்தில் தள்ளும் **பட்டம் பதவி**யையும்!
தானே பெறுகிறீர்கள்? (அழியும் படிப்பில்)
அங்கு **உங்கள்** தொலைத்து விட்டீர்களே!
உங்களை மறந்தே போய் விட்டீர்களே!

**"தன்னை அறியும் அறிவை"!**

உணர 15/ 20/ ஆண்டுகளாவது பயிற்சி செய்ய
வேண்டாமா? ஓர் உண்மை என்னவென்றால்?

**"அருளும்! பொருளும்"!** அன்றும்,
இன்றும்! என்றென்றும்! ஒன்று சேராது, என்பதே
சத்தியம்.
முன்கூறிய, சர்வாரிப்பணம்! ஒன்றே,
நாம ரூப, பொருள் ஜகஜீவ, உறவு சுற்றம், நட்பு!
அனைத்தும், சர்வநாசம் ஆகும்!



ஒருமை! தனிமை! (90)
நான், என்றல்;
எனது; என்ற நிலையால்
தனிமையாக்கிட கர்மாவை
தாமேதந்தால் ஆகும்.
பன்மை, பணியின் கனிவு:—
யாம்! எம்மால், எம்முடையது,
என்று ஸ்ரீ பகவானையும் சேர்த்துக் கொள்வதால்;
வினை தோஷம் அழிகிறது, ஜீவன் முக்திக்கு வழியும் பிறக்கிறது,


இக் கலியுக தோஷம், எப்படி உங்களை பிடிக்கிறது என்றால், ??????????????????????

உறவு! சுற்றம்! நட்பு! தொழில்! பொருள்!
வரவு செலவு! போக்குவரவு! கொடுக்கல் வாங்கல்!
ஆகியவைகளில், "**பன்மையாக**" ஸ்ரீபகவானையும் சேர்க்காமல்! "**ஒருமையாக**" நான் என்றல் என்று! பொருள் தெரியாமல், அதாவது விஷயம் தெரியாமல்! இதனால் என்ன ஆகும் என்ற, விபரம் தெரியாமல்! உங்கள் "**கவனக்குறைவில்!**"

மற்றும், பேசிப் பேசி! பேசிப் பேசி! பேசிப் பேசி! பேச்சு சுவாரஸ்யத்தில் மயங்கி, அந்த "**பழக்க தோஷத்திலேயும்!**"

கொடுக்கல் வாங்கல்! பற்று வரவு! போக்கு வரவு! என்ற பண்டப்பரிவர்த்தனை, நிலையில் வந்த "**வழக்க தோஷத்திலேயும்!**"

ஊறிப் போன தன்மையிலும், விடேன்! விடேன்!



91

விடேன்! விடேன்! விடேன்! விடேன்! என்று,
"ஜகம்" சொல்லவில்லை! அது "ஜட" சொரூபம்!
"மனம்" சொல்கிறது! அது! மனக்கிளியே நீ
ஓர் மாசற்ற பெருங் கிளி! நல்ல கிளி!!
"சன்(கற்பக்)கிளி" ஆசையடி
சேர்க்கையின், தோஷத்தினால்! என்றபடி,
பழக்க வழக்கத்தில், சிக்கிய மனம், பாரம் ஆகி விட்டது
இப்பாரம் கெட்டு, நாசமாக வேண்டுமானால், முன்
சொல்லிய நிலையில், சர்வார்ப்பணமே! பழக்க
வழக்க தோஷத்தை சர்வநாசம் செய்யும்!
இப்பாடம் "மாயாமனதுர்ஜே" ஆகும்.
ஜக ஜட உடலுக்கல்ல. பலகால வாதனையால் தோன்றிய
துவைதமானது, இறை(பர)குரு கருணையால் தான்
நாசமாகுமேயல்லாது, வேறு எந்த சாதனையாலும் நாசமாகா
ஆகவே, ஜக வாஸ, தோஷ, பழக்க வழக்கங்களில் கோது
சர்வ ஜாக்ரதையாக, இருந்தால் மனோநாசமாகும்!
அதுவே மனோஜயம் ஆகும்!



(௯௨)

உறவு சுற்றம்
நட்பு அனைத்தும்
அவஸ்யமானது
இறையும் என்றால்
அதிசய பந்து என
ஆவார்கள் என பொருள்படும்!

(௨௪)

பேச்சைக் குறை! கல்வி போல், அசையாமலிரு.

"தற்போது" சூனியமாய்! "தற்பதமே"

நாமாகி, ஜீவன் முக்தி பெறுவாய்.

மௌனம் என்பது, பேசாமல் இருப்பதல்ல.

குறைவாக பேசு. பேச்சில் நிறைவு காண வேண்டும்.


"இறைகுரு" உணர்வோடு பேசு.

நிலை கண்டு, இடம் கண்டு, பொருள் கொண்டு,

"பேசு." அளவு பேசாமல், இருக்கவும் பழகு!

மேலே கூறியபடி, அனுஷ்டிக்கால், உறவு சுற்றம், நட்பு, "அவஸ்யமானது" படிப்படியாக! படிப்படியாக குறையும்.


மேலே கூறியவர்கள், "அவஸ்யமானவர்கள்" (தெய்வம் மனுஷியாகும் என்ற நிலையில்) (இதுவே அதிசய பந்து ஆவார்) (தெய்வம் தோன்றுத துணைவன், என்ற நிலையில்)



௧௩

படிப்படியாக, படிப்படியாக, இனிவரு! இங்கு
உன் பழக்க, வழக்க, தோஷத்தினால்,
ஆரம்பத்தில், உன் **மனம்** ஏங்காது!
ஆகவே இங்கு உன் மனம், குத்துக் **கல்லைப்**"
அசையாமல், சலியாமல் இருக்க வேண்டும். போல்
இந்நிலை பெற, உனக்கு, தாரக மந்திரமாவது?
எல்லாம் நீயே! எல்லாம் நவமே! எல்லாம் நீயே!
எல்லாம் நவமே! என்ற முறையோடு, இறை உணர்வும்
பரவுணர்வும்! பெருக வேண்டும்!
இதனால் "**தற்போதம்**" குறைந்து! குறைந்து!
நாசம் ஆகும்! பாடம் படிப்பு, குறைந்து நாசம் ஆகும்!
இதனால் "**தற்பதம்" பரமாத்மநிலை**
நாமே பரமாத்மா! நாமே பகவான்! நாமே எல்லாம்!


௧௮



என்ற, ஸ்வய அனுபவ நிலை, பெறுவதால்,
சந்தேக கலக்க பயம் ஒழியும் ஆரம்பம்,
சர்வார்ப்பண முடி! முடிவில், பிரம்மார்ப்பண முடி!
எம்முயற்சியும்! எம்பயிற்சியும்! இல்லாமல்
**இயல்பாகவே** அமைவதால் அதுவே
மனோ ஜயம் ஆகும்!

௧௫ ஏக பரபாவனையை, இடைவிடாமல் செய்தால்
**மோஹம்** நாசமாகும்!

ஆரம்ப நிலையில், பரந்தை, தந்தை (ஸ்ரீபகவான்)
ஆகவும்; உன்னை தனயன் ஆகவும், பாவனை செய்!
இப்பாவனை, ஸத்தியமானால், புண்ணிய பாபம், உன்னை தொடாது!
அப்பாவனை, உன் தந்தையிடம் எல்லாம் நீயே! எனவிடுவதாகும்
பின் உன் அனுபவத்தில் **தந்தை** (ஸ்ரீபகவான்) நீயே! ஆவாய்!
இந்நிலையில், உன் சிருஷ்டியில், உனக்கு "**மோஹம்**"
வராது! வர முடியாது!! வர இயலாது!!! எப்படியெனில்?
உன் குழந்தை மேல், உனக்கு "**அன்பு**" உண்டாகுமே தவிர,
**மோஹம்** உண்டாகாது! அப்படி உண்டானாலும்
நீ தந்தை ஆகவில்லை!




95

ஸ்ரீபகவான் (சாட்சி) நிலையே, மோஹம் உண்டாகா நிலையாகும்.
மோஹம் என்ற நிலையில், ஸம்சாரம் (அசைக்கும், சஞ்சலம்) உண்டாகாதன்மையிருந்து "மனோபாரம்" அவசியம் இருக்கமுடியாது! மனோபாரம் இருக்க இயலாது!
இப்படி மனோபாரம் அற்ற நிலையில், மனம் லேசாகிவிடுகிறது.
அப்படி லேசான மனதில், பிரம்மார்ப்பணமாகிய, எல்லாம் ஒன்றே! அதுவே! அதுயாமே! யாமே அது! என்ற "அகண்டானம்" பாவனை நிலைபெற்று நிற்கும். அப்பாவனையே, மனோ ஜயம் ஆகும்!

(26) "மனோ" நினைவாய்! இருப்பதுவே பந்தம்!
"நினைவற்ற" நிலையே, சுத்த அத்வைதம் ஆகும்!
(A) ,, ,, நிரதிசய ஆனந்தம் ஆகும்!

மனோநினைவே, மனுக்கோர பந்தம் :- மனதால் செய்வதுவே "கர்மா" ஆகும்! உடலால் செய்வது, கர்மா ஆகாது! மின்சாரம் ஆத்மாவாகும்! ஸ்விட்ச்போர்டு மனம் ஆகும்! கிரைண்டர் & மிக்ஸி, தாவசரீரம் ஆகும்!





மின்சாரம் என்ற ஆத்மா கண்ணுக்கு, தெரியாத நிலையில்,
"இயக்கசக்தி" ஆகும். அது பிரயோஜனம்
படுத்துவதாகும்! பிரயோஜனம்படுவதாகாது!
ஸ்விட்ச் போர்டு என்ற மனம், மின்சாரம் இல்லாமல்,
(ஆத்மா இல்லாமல்) இயங்க முடியாது! இயங்க இயலாது!
கிரைண்டர் & மிக்ஸி என்ற தூல உடல், இல்லாமல்,
மின்சாரம் என்ற, ஆத்மாவோ! ஸ்விச் போர்டு என்ற மனமோ!
இருந்தும், பிரயோஜனம் இல்லை! ஆகவே?
"இம்மூன்றும்" ஒன்றில்லையானாலும்,
இரண்டால் எப்பயனும் இல்லை! இம்மூன்றும் இல்லையானால்
நாமரூப, ஜகத் ஜீவ, உலக தோற்றம் இல்லவேயில்லை!
இவ்சொல்லும், முக்கிய கருத்து:- மனதால் செய்வதுவே
செய்ததாகும்! மற்றன்றால், (உடலால்) செய்வதெல்லாம்
செய்ததாகா! கர்மா ஆகாது!
எய்தவன் இருக்க அம்பை நோவானேன்? என்ற பழ
மொழிப்படி, செய்வது (மனம்) செய்வது (உடல்)!
இயக்குவது (மனம்) இயங்குவது (உடல்)
ஆகவே உடலால், எப்பிரயோஜனமும் இல்லை! ஆனால் பிரயோஜனம்
படுவதுபோல், மனம்படைத்தோர்க்கே தோன்றும்!



(97)

மண்ணை இருந்தால்
"நாமா" உண்டு.
ரூபம் இல்லை.
ரூபம் இல்லை என்றால்?
உபயோகிக்கும் ரூபம் இல்லை.
ஜலம் சேர்ந்தால், உபயோகிக்கும் ரூபம் உண்டு.

(B)

ஆகவே இம் மனதின் எண்ணமே "பந்தம்" என்றார்.

அதாவது, மண்ணை இருந்தால், தோற்றம் இல்லை.
ரூபம் என்ற தோற்றம் தோன்றினால், மண் தோன்றாது.
ரூபம் என்ற தோற்றம் தோன்றினால், சொந்தம் கொண்டாடும் மனம் உண்டு.

சொந்தம் கொண்டாடும், மனம் இருந்தால், பந்தம் கொண்டாடும், உறவு நட்பும் உண்டு. பந்தம் என்ற, உறவு நட்பு இருந்தால், பாசப் பிணைப்பும், உண்டு. பாசப் பிணைப்பு இருந்தால், விருப்பும் வெறுப்பும், உண்டு. விருப்பும் வெறுப்பும் இருந்தால், புண்ணிய பாபம் என்ற, வினை உண்டு. புண்ணிய பாபம், உண்டானால், ஜனன மரணமும், உண்டு. ஆகவே பந்தத்தால், வினையதே ஜனனமரணம் எனத், தெளிவாகிறது. இவை அனைத்திற்கும், மூலம் கற்பனையான "எண்ணமே"!

இந்த எண்ணமற்றிருப்பதே, சுத்த "அத்வைதம்" என்றார்.

அதாவது எண்ணம் இல்லையானால், நாம ரூப ஜகத் ஜீவ சொரூபங்கள், இருந்தும் இல்லாததே. அதாவது இருந்தும் பிரயோஜனமில்லை. மேலே கூறிய, நாம ரூப, சம்பந்த அகில, உலக கோள்களும், அவற்றின், அனைத்து ஜீவ தாவர வர்க்கங்களும் இல்லை யென்றுமே போது, அதை இதுகாலபரியந்தம்,



(94)

நிர் அதிசயம்
எதிர்ப்பும்! அதனால்
ஏமாற்றமும்! ,,
தடுமாற்றமும்! ,,
மனமயக்க போதையும்
உண்டாகி, பிறப்பிறப்பினை
நாசம் செய்யும் நிலையாகும்.

"உண்டு" என்றிருந்த ஜீவனும் ஜீவத்வமும் இல்லையென்றால், இருப்பது ஒன்றே! என்ற நிலையில், அது அந்த அத்வைதமே! அதன் அந்த வழியில், எண்ணமற்றிருப்பதே, நிர்அதிசயம் ஆகும்! என்றும் நிர் அதிசயம் ஆனால், வியப்போ! விசித்திரமான ஆச்சர்யமோ! விந்தையோ! அதிசய தோற்றமோ! நிகழ்ச்சியோ இல்லாததாகும்!

மேலே சொன்ன, பல கோணங்களில், நாம ரூப ஜகஜீவர்கள் வருவதும், போவதும், தோன்றுவதும், மாறுவதும், மறைவதும், விசித்திரமாகவும், விநோதமாகவும், வியப்பாகவும், தோன்றுகிறதே என்றால், இது மாயையின் "கற்பனை"யாகும்! உண்மையில் இல்லை! அதை இப்படி உணர்ந்தால் விளங்கும்! எல்லாம் "மண்ணே"! மண்ணுக்கு அன்னியமாய் எதுவும் இல்லை! எக்காலமும் இல்லை! முக்காலமும் இல்லை! என்பதே பிரமாண உண்மையாகும். அப்படி நிர்மலித்த மெய் உணர்வில், அனைத்து நாம ரூபங்களையும், தன்னிலே, எல்லாம் ஒன்றே! அது நானே! நானே அது! என்பது தெளிவாகும். இதுவே மனோ ஜயம் ஆகும்!



கர்மாவின் எண்ணத்தை, உண்டாக்குவது மனம்! அவ்வெண்ணத்தை, செயலாக்கும் கருவியே உடல்!

ஆகவே, கர்மாவின், முழுபொறுப்பும் மனமே!

விறகு தீர்ந்தவுடன், அக்கினி அணைந்து, சாந்தியாவது போல்;

"கர்மாவும் மனமும்!"

மனமும் கர்மாவும்!

தீர்ந்து, சாந்தி ஆகில், எல்லாம் ஒன்றே! அது நாமே! நாமே அது! என்பது, பிரத்தியக்ஷமாகும்!

அக்கினியானது திடீர் எனத் தோன்றும்! திடீர் எனமறையும்!

" ஒன்றுடன் ஒன்று, உராய்ந்தால் தோன்றும்!

" உலர்ந்த சருகு விறகு இவைகளை எரிக்கத்தோன்றும்

" எரிந்து முடிந்தால், யாரும் சொல்லாமலும், யாரையும் கேட்காமலும்; "தான் தானே" சாந்தியாகி மறைந்துவிடும்!

அதுபோல?

"மன" எண்ணத்தால் வந்த "கர்மாவும்"!

"கர்மாவின்" நிறைவான "மனமும்"!

இது போதும் என்ற "பூரண நிறைவு" வந்தால்,

அதுவே சாந்தியும்! ஆனந்தமும்! ஆகும்!




பார்ப்பது! கேட்பது! சுவைப்பது! நுகர்வது! தொடுவது! ஆகிய இந்த ஐந்திரியம் ஆதாரமான நிறைவு தோன்றுவது சர்வார்ப்பணம் ஒன்றேயே முடியும். இது மாயாவும்! மனமும்! இணைந்து நிறைவு பெறு ஆகவே இங்கு கர்மா நாசமாகிறது. இறைவு

பார்ப்பது, கேட்பது, சுவைப்பது, நுகர்வது, தொடுவது, அதுபற்றி குற்றம் குறையாக! பேத உணர்வாக!

"கற்பனை" பண்ணி, பேசுவதும், அதனால் வரும், விளக்கம் கேட்பதும், இதனாலேயே "கர்மா" பெருகிறது! மேலே கூறிய இந்திரியம், மேலே கூறிய நிலையில், கற்பனை பண்ணாமல் இருந்தால், கர்மா பெருகாது! இங்கு ஸ்ரீபகவான் நிலையில், சர்வார்ப்பணம்! பரிபூரணமாக இருந்தால்,

மேலே கூறிய, கோடிக்கணக்கான கற்பனை, அவசியம் வராது! இங்கு ஓர், உண்மை என்னவென்றால்?


கர்மா இருந்தாலும், மனம் கற்பனை பண்ணும்! கற்பனை பண்ணும் வரையிலும், கர்மா பெருகும்! இவை இரண்டும் "கர்மாவும் மனமும்" ஒன்றுடன் ஒன்று, சங்கிலி போன்று, பிணைக்கப்பட்டதாகும். ஆகவே எப்போதும் நீயே! சர்வார்ப்பணத்தால், வலிய கர்மா சாந்தியாகும்! (அழியாது) (உவரும்) மனம் புதிய கற்பனை, பண்ண முடியாதபடி, மாயா கவனித்துக் கொள்ளும்!



இதனை "எழுச்சி" அடங்குகிறது! எழுச்சி அடங்குகிறது என்றால், வினை விறகு உலர்கிறது; எனப் பொருள்படும். உலர்ந்த விறகை, உன் ஸத்குருவின், ஞானத்தீயினில், அவஸ்யம் எரித்து சாம்பலாக்கி விடலாம். வேறு எந்த நிலையிலும் அவ் விறகை, எரிக்க முடியாது. என்பதே பிரமாண உண்மையாகும். இப்படி மனம், பக்குவப்படுவதையே, மனோ ஜயம் எனச் சொல்வார்கள்.


(27) லௌகீகத்திற்கு, புண்ணிய பாபம் என உண்டு.
வைதீகத்திற்கு, ஸத்திய கர்மம் என உண்டு.
பரமார்த்திகத்திற்கு, எந்தவித, கர்மாகர்மமும் இல்லை.

(A) லௌகீகம்:— பெரும்பாலும், இங்கு பொன், பொருள், பூமி, என்ற நிலையில், "நாமரூப" பொருள்களை, தான கர்மம் எனச் செய்வதுண்டு. பலன் கருதி செய்வது "தானம்"! பலன் கருதாமல் செய்வது "தர்மம்"! எனப் பேசப்படுகிறது.



இப் பொருள் தான தர்மமானது, "நிஷ்காம்ய"
புண்ணியமாகவும் மாறும்! பாபமாகவும் மாறும்!
நான்! என்றல்! எனது! எனச் செய்தால், மேலே
கண்டநிலையில், பலன் தரும்!
எல்லாம் நீயே! எல்லாம் உன்றல்! எல்லாம் உனக்கே!
எனச் செய்தால், "நிஷ்காம்ய" புண்ணியம்
எனவும் மாறும்! தர்மமாகவும் மாறும்! ஆனால்
பாபமாக மாறாது! இது பிரமாண உண்மை!


(B) தெய்வீகம்:— இங்கு, நாம ரூப பொருள்,
தர்மத்தை விட, "போக்கே" இங்கு, முக்கியத்
துவம்; முதலிடமும் பெறுகிறது. இங்கு "ஸத்ய
வாக்கு தர்மமாக" செய்யப்படுகிறது.
நாம ரூப பொருள், இரண்டாம் இடம் பெறுகிறது.
பேசும் ஒவ்வொரு வாக்கிலும், "இறை
ஞா" உணர்வு, இருக்க வேண்டும்! இங்கு எந்த
எதிர்பார்ப்பும் (வியாபாரமும்) இருக்கவாகாது!
இருக்கமுடியாது! இருக்க இயலாது!



முந்தையதில், இன்பமும் துன்பமும்! மாறி மாறி
தோன்றும்! ஆனால் ஆனந்தம் தோன்றாது!
பிந்தையதில், ஆனந்தம் ஒன்றே தோன்றும்! இது
பேரின்பம் என்ற, பேரானந்தம் ஆகும்! இது
பெயரளவில், ஸ்ரீபகவன் **நாமாவில்!**
தோன்றும் ஒன்றாகும். இது நிலையற்றதல்ல!

பரமார்த்திகம்:– இங்கு மேலே கூறிய,
இரண்டு நிலைகளும் இல்லை.

ஆகவே, எந்த கர்மாகர்மங்களும், இல்லவே இல்லை
என, ஸ்ரீமஹான்கள் கூறுவர். மேலே கூறிய இரண்டும்,
ஜனன மரணம் உண்டு. அவ்விரண்டும் கர்மாவின்,
**பிரவர்த்தி** என்ற நிலையில், முறையே
இரும்பு ஊசி என்றும்! பொன் ஊசி என்றும்!
உபசாரமாக சொல்வர். இப் பரமார்த்திகமானது,
எந்த கர்மாவிற்கும், அடைய முடியாத ஒன்றாகும்!
ஆனால் கர்மாவை விட்டாலன்றி, இது ஸாத்தியமாகாது.
இது "**நிவர்த்தி**" மார்க்கம் ஆகும்!




இந்த லௌகீகத்தையும், தெய்வீகத்தையும், விலக்க வேண்டும். என்பதற்காக, ஸ்ரீ ரிபு மஹரிஷி, அருமையான வார்த்தையை போட்டார்.

அதாவது :- மலினமென லௌகீகமென சுத்தமென தெய்வீகமென மதிக்கப்பட்ட, மனதின் வாதனைகளும், வேதனைகளும், கடும் சாதனைகளும், அதன் **சோதனைகளும்** பொறுமையுடன், சகித்துக்கொண்டு ஒன்றும் இல்லாமல், பட்டமரம் போலும், குத்துக்கல்லைப் போலும், **இருப்பதொன்றே, நடப்பதனமே,** என அசைவற்று, ஆசையற்று, எந்த சலனமும் (சலிப்பும்) இல்லாமல் சும்மாவே சுகமாக, இருப்பாயாக என்கிறார்.

இப்படி மனம், ஆசையற்று, அசைவற்று, இருக்கப் பழகிவிட்டால், அதுவே மனோஜயம் ஆகும்.

(105)




காலம் இல்லை! அதன் கற்பனையும் இல்லை! அதன் காட்சியும் இல்லை!

தூலத்தின் கணக்கும் இல்லை! அதனால் தொடரும், பவபந்தம் இல்லை!

மாயாவின் மயக்கம் இல்லை! அதனால் வினையும், புண்ணியமாய, செய்கையும் இல்லை!

எப்பொருளும் உண்டாகவில்லை! அப்படி உண்டாகாதது, எப்படி எங்கு இருக்கும்?

அப்படி உண்டாகாதது, வந்தது என்றோ? இருந்தது என்றோ? மாறியது மறைந்தது என்றோ? எப்படி சொல்ல முடியும்?

எந்தப் பொருளாவது, எங்கேயாவது, இருக்கும் என்றால், இப்படி, இதனால், இது, இருக்கிறது என சொல்லலாம்?

ஸிதம்பர சொரூபமே, என்றுமாய், ஏகமாய், எங்குமாய், இருப்பதனால், அதை விளக்க, வாக்கு ஏது? வழி ஏது?

அணுப்பிரமாணமும், அந்த ஒன்றையன்றி வேறில்லை! ஆகவே, வேறு பொருள் ஓர் அணுவும் இல்லை!

பிரிக்கின்ற நாமம் இல்லை! பேதப் படுத்தும் உருவம் இல்லை. ஹதவிதமான, எந்த பொருளும் இல்லை! ஆகவே, எங்கும் எந்த நாமரூப, ஜக ஜீவ, தோற்றங்களும் இல்லை!

**ஸ்வதந்திரமாய் ஒன்றே ஒன்றுதான் உண்டு.**




மகா மௌனம்
என்றால் மனம் பேசா
நிலை என்றும், நாமரூப
ஜகஜீவ ஈஸ்வரங்கள்
முழுமையாக இல்லாமல்
நாம் நாமான இடம்
என்றும் அகண்டாகார
பாவனையே நாம் ஆகி
அகண்டைக ரஸ ஸ்வரூபமாகவே இருத்தல்
ஆகும்!

(J) இல்லை என்ற சொல்லும் இல்லை! இங்கு இருக்கிறது என்ற பொருளும் இல்லை, வாக்கால் சொல்லிச் சொல்லியே, விளக்கம் கொடுக்கும், "ஒலி" ஒன்று தான், தோன்றுகிறது!

(K) ஆகவே "சொல் அற சும்மாவே இருந்து மகா மௌனம்" ஆகவே அவ்வவ் இல்லாத, அகண்டானந்தம், அனுபவத்திலே, குந்துக்கல்லிப் போல், அதுவே நாம் ஆகி! நாமே அது ஆகி! அசைவற்று இருக்கலாம்!


(A) காலம் இல்லை! அதன் கற்பனையும் இல்லை! அதன் காட்சியும் இல்லை :— காலத்தின் இருப்பு என்பது, நாமரூப பொருள், வந்தது என்றும், இருந்தது என்றும், மறைந்தது என்றும், சொல்லும் "முக்காலமும்" இல்லவே இல்லை! காரணை எல்லாம் "மண்" என்ற, ஓர் நாமமாவே! அங்கு, எந்த உருவமும் இல்லை! உருவம் உண்டானால், கற்பனை அவசியம் தோன்றும். உருவம் இல்லாத் தன்மையிலே, அதன் கற்பனையும் இல்லை! எல்லாம் மண்ணுக்கு அன்னியமில்லாமல், உருவம் இல்லாத் தன்மையிலே, எந்த "காட்சியும்" இல்லவே இல்லை!



(B) தூலத்தின் கணக்கும் இல்லை அதனால் தொடரும், பவபந்தம் இல்லை:— மனித இனத்தையும் சேர்த்து, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும் அந்த கிருமி கீடங்கள், என்று சொல்லும், 84 லட்சம், ஜீவ கோடிகள், எனச் சொல்லும், அந்த ஜீவ சரீரங்களுக்கும், எந்த கணக்கும் இல்லை! ஆச்சரியமாக இருக்கா?


எல்லாம் "மண்ணே" மண்ணுக்கு, அன்னியமாக எதுவும் இல்லை! கணக்குக்கு "மனமே" காரணமாகும். மனமே இல்லாத, தன்மையிருல், கணக்கு தேவையில்லை என்று சொல்வதை விட, கணக்கே இல்லை! தூலக்கணக்கு, இருந்தால் அத்தூலத்திற்கு, பவபந்தம் என்ற சம்பந்தம் உண்டு. இங்கு பவபந்தமும் இல்லை அதன் சம்பந்தமும் இல்லை. மண்ணுக்கு (போகின்றது) கணக்கே இல்லை! ஆகவே பவபந்தமும் இல்லை.

(C) மாயாவின் மனமும் இல்லை அதனால் வினையும், புண்ணிய பாப செய்கையும் இல்லை:— தூலத்திற்கு, அந்த "ஒன்று" என்ற தோற்றத்தையும் எடுக்க வில்லை! அது ஏதாவது ஓர் வடிவெடுக்கால்தான், அதன் "நிழல்" மாயா உண்டாக முடியும். ஆகவே மாயாவும் இல்லை.



மாயா வந்தால்தான், மனம் பிறக்கவும் இருக்கவும் முடியும்!
"தாய் மாயா" இல்லையென்றால், அதனுடைய "சேய் மனம்" எப்படி வர முடியும்? ஆகவே மாயாவும் இல்லை! மனமும் இல்லை! மனம் இருந்தால்தான், அது இருக்க ஆட, ஓர் தூலம் வேண்டும்? மனம் இல்லாத தன்மையினால், எந்த தூலமும் இல்லை! தூலம் இருந்தால்தான் புண்ணிய பாபம் என்ற, செய்கை "காமா" உண்டாக முடியும்? ஆகவே மாயாவும் இல்லை! அதன் மனமும் இல்லை! அதன் இயக்க தூலமும் இல்லை! தூல இயக்க, புண்ணிய பாபம் என்ற, கர்மாவும் இல்லவே இல்லை!

D எப்பொருளும், உண்டாகவில்லை. அப்படி உண்டாகாதது, எப்படி எங்கு இருக்கும்?
உன் கண்ணால், காணக்கூடிய, அதாவது உன் மனதால், இது இத்தகையது! இது இன்ன செய்யும்! இது இதால் ஆனது! இது இப்படி உபயோகம் ஆகும்! இது இன்பம் கொடுக்கும்! இது துன்பம் கொடுக்கும்! என்று, பல நாமரூபங்களாக காண, "கற்பனை நாமரூபம்" அனைத்தும், உன் எண்ணத்தால், வந்ததே தவிர, அவைகள் "தாமே தன்மை" உருவகப்படுத்திக் கொண்டு வந்ததல்ல, என்பதே சத்தியம்! இதன் உண்மை என்ன வென்றால்?



# உன் "ஆசையும் தேவையும்"!

உன் மனதை இன்பப்படுத்தற்காக, நீயாக உண்டாக்கியவையே யன்றி, அதுவாக, நாமரூபம் தோன்றி வரவில்லை.
இதன் முழு பொறுப்பும், உன் "மனமே" யன்றி வேறு யாருமில்லை!

{ஸ்ரீபகவான்}
அவன் உண்டாக்கியதோ, மண்! மலை! ஜலம்! தாவரம்!
இவ்வளவுதான்! அறிவீரோ,

கோடானுகோடி நாமரூபங்களை, மனதால் வரித்து, தாவத்தால், ஆக்கிக் கொண்டாய்.

ஆனால், உற்றுணர்ந்து நோக்கினால் எல்லாம் "மனமே"
நாமரூபம்
ஆகவே, எதுவும் இயல்பாக தானே உண்டாகவில்லை!

ஆகவே அவைகள், "இங்கு இப்படி" இருந்தது
என்று, எப்படி சொல்ல முடியும்? ஆறு சொல்வது என்றால், எல்லாம் மனமே, எனச் சொல்லலாம்! ஆகவே,

நாமரூப பொருள், எல்லாம் எங்கும்! எப்படியும்! எப்போதும்! இப்போதும்! இல்லவே இல்லை!
இருப்பதெல்லாம், எங்கும்! எப்போதும்! ஏகாந்தமும்! ஏகாந்தமும் மனமே! அதாவது பரமாகிய மனமே! மனமாகிய பரமே! என உறுதி செய்வாயாக.



E அப்படி உண்டாகாதது, வந்தது என்றோ? இருந்தது என்றோ? மாறியது/மறைந்தது என்றோ? எப்படி சொல்ல முடியும்? :- முன்கூறிய நிலையில்,


"உற்றுணர்ந்து" நோக்கினால், இவை அனைத்தையும், "ஸத்தே, ஸித்தாக" மாறி, ஸித்தே சித்தமாக (மனம் புத்தியாக) மாறி, அதுவே அதுவது

காலாதீத ஸத்தே, தன்னால் விளையாட, முடியாத்தன்மையில், விளையாட இயலாத்தன்மையால், தானே மற்றொன்றாய் ஆகி, (ஸித், சித்தமென தோன்றி) பற்பல நாமரூபங்களாக, உண்மையின் விளையாடிக் கொண்டிருக்கிறது. அவ் விளையாட்டின், சுவாரஸ்யத்திற்காக, தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, என ஆக்கிக் கொண்டது, இதில் ஓர் உண்மையை, எப்படி உணர வேண்டும் என்றால்? எந்தன் நாமரூபம் மாற்றி மாறி, மாற்றமாறி, மாற்றி மாறி, மாற்றி மாறி, எந்த விளையாடினாலும், அவை விளையாட்டின், நாமரூபமே யன்றி உண்மையல்ல. உண்மை என்பது, மண்ணே, மண்ணையே பரமே, பரமாகிய மண்ணே, என உணர்ந்தால் போதும்.



மாறி மாறி வரும்
நாமரூபம்
அனைத்தும்
நிலையில்லாததாகும்.
நிலையாயிருப்பது
ஒன்றே ஒன்றுதான்.
அது **மண்ணே!**
மண்ணுக்கு அன்னியமாய்
எந்த நாமரூபமும் இல்லை என்பது சத்தியம்.
மண்ணாகியமாமே! பரமாகிய மண்ணே! அதுவே நாமம்
என்பதும் சத்தியமே

எந்தப் பொருளாவது, எங்கேயாவது, இருக்கும் என்றால்.
இப்படி இருந்தால், இது இருக்கிறது என சொல்லமுடியும்.
இன்று பருத்தியாக இருந்தது, நாளை பஞ்சு என ஆனது!
இன்று பஞ்சு என இருந்தது, நாளை நூல் என ஆனது!
இன்று நூல் என இருந்தது, நாளை வஸ்திரம் என ஆனது!
இன்று வஸ்திரம் என இருந்தது, நாளை கந்தல் என ஆனது!
இன்று கந்தல் என ஆனது, நாளை குப்பை என ஆனது!
இன்று குப்பை என ஆனது, நாளை தூசி என ஆனது!
இன்று தூசி என ஆனது, நாளை ஜீவ அணு என ஆனது!
இன்று ஜீவ அணு என ஆனது, நாளை ஆத்மா என ஆனது!
இன்று ஆத்மா என ஆனது, நாளை பரமாத்மா என ஆனது!
இன்று பரமாத்மா என ஆனது, நாளை பரசொரூபம் என ஆனது!
பரசொரூபமே! காலாதீத அந்த **ஒன்றும்!**
அந்த ஒன்றே நாம் ஆகும்! நாமே அந்த ஒன்றும்!
ஆகவே, எந்த ஒரு தோற்றத்தையும் வைத்து,
"**இது இதுதான்**" என சொல்ல முடியாது!
சொல்லக் கூடாது! சொல்ல இயலாது! அப்படி
சொல்வதாக இருந்தால் **இது அதுவே** என
சத்தியம் புகலலாம்!
வேறு வேறு நாமரூபங்களை சொன்னால் அது
பொருந்தாது! அதுவே நாம் என சொல்லலாம்!



ஓ ஸத் சித் பர சொரூபமே, எங்குமாய், ஏகமாய், எதிலுமாய், இருப்பதால், அதை விளக்கவாகிறதே? (அதுவே ஸத்தாகி) வரி ஏது:— "ஸத்தாகி" எம் சித்தமிசை, குடிகொண்ட "அறிவான" தெய்வமே, தேஜோமயானந்தமே! என்றார் ஓர் ஸ்ரீ மஹாத்மா! இதில் என்ன உணர்கிறோம் என்றால்? ஸத் என்றால் "பரம்"! சித் என்றால் "சிவம்"! சித்தம் என்றால் "சிவன்" என்ற ஸ்ரீ பரமாத்மா வாகிய, ஸ்ரீ பகவான்!

இங்கு சித்தம் மலினம் ஆனால், (தாழ்ச்சி ஆனால்) மனம், புத்தி என, கற்பனை பண்ணி, நாம ரூப ஜகத்தை, உண்டுபண்ணும். இங்கு, சித்தம் சுடர்மயமானால் (மேல் நோக்கி சென்றால்) அதுவே, அறிவாகிய, ஸ்ரீ பகவான் ஆகவும் முடியும்!

ஆகவே தான் இங்கு இப்படி, ஓர் வார்த்தையை போட்டார். அதாவது:- அறிவான தெய்வமே, தேஜோமயானந்தமே! என்றார் அறிவு சொரூபமாக, இருக்கப்பட்ட, ஸ்ரீ பகவானானவன் "அகண்டபேரான" ஆகியே/ அதாவது தேஜோமயமான, (தேஜஸ்) ஆனந்த வடிவம் என்றார்.



(1) விளக்க:– (113)
ஓர் பொருளை, இன்னதென, விளக்குவது!
(2) விளங்க:– அப்படி விளக்கியதை திரும்ப, இரும்ப சாதி, விளங்கம் பண்ணுவது!
(3) துலங்க:– அப்படி விளங்கப்பண்ணியதை பல உபசார வசனங்கள் சொல்லி, துலங்கம் (பிரகாசிக்கம்) பண்ணுவது.

அப்படி, அகண்டப் பேரொளியாய், இருப்பதை, (பரமாகிய ஸ்ரீ பகவானை) விளக்கவோ! துலக்கவோ!
"வரியோ / வாக்கோ" இல்லவே இல்லை!
(H) அனுப்பிரமாணமும், அந்த ஒன்றை யன்றி, வேறில்லை! ஆகவே சொற்பொருள், ஓர் அனுவும் இல்லை:
முன் வரிக்கு சொன்னபடி, அதை விளக்க வரியோ வாக்கோ, இல்லை யென்ற நிலையில்,
சொல் பொருள் என்றால், ஓர் நிலையில், வாக்கும், விளக்கமும்!
எனும் பொருள் கொள்ளலாம்!
மற்றோர் நிலையில், சொல் என்றால் "நாமம்"
பொருள் என்றால் "ரூபம்!" எனவும் பொருளாகும்!
இப்படி இரு நிலைகளில் பார்க்கும்போதும் அந்த ஒன்றை,
"ஈடிணை / ஒப்புயர்வு / விளங்க துலங்க / வரி & வாக்கு, எதுவும், முடியாததாகும்! அதை துவைத நிலையில்
"உண்டு" எனவும் சொல்லலாம்! அத்வைத நிலையில்
"இல்லை" என்றும் சொல்லலாம்!
நாமரூபம் இல்லை! ஆனால் அது உண்டு!
துவைதம் அங்கு நாமரூபம் உண்டு.
அத்வைதம் இங்கு நாமரூபம் இல்லை! ஆனால் அது உண்டு!



௨ இரண்டு (114)

என்பது, ஸ்ரீ பகவானையும் நம்மையும் இணைப்பது இருமை யென்பதாகும். ஆறல் மூன்று என்றும், பலபல வென்றும் வரும் போது குணக்கோலம் பின்னவிட்டு பிறவியை, கொடுக்கும். இரண்டு பேரானந்தம். மூன்று விஷயானந்தம், ஒன்று பிரம்மானந்தம்.

இதைத்தான், எம் ஸ்ரீ ரிபு மஹாத்மா, அழகாகச் சொன்னார்.

"இருமையை" பிரம்மமில்லாது எதையும் காணோம், என அருமையாகச் சொன்னார்.

இங்கு பக்தன் – ஸ்ரீ பகவான், என்ற நிலை ஆனாலும் சரி, சிஷ்யன் – குரு, என்ற நிலையானாலும் சரி, இன்பம், துன்பம், நன்மை, தீமை, சுகம், துக்கம், புண்ணியம், பாபம், லாபம், நஷ்டம், நினைவு, மறப்பு, சொர்க்கம், நரகம், போக்கு, வரவு, கொடுக்கல், வாங்கல், வருவது, போவது, உண்டு, இல்லை, வரவு, பற்று, இப்படி இன்னமும், அநேகம் சொல்லலாம்.

இவை அனைத்தும், "இரண்டு" பட்டதேயன்றோ, "மூன்றையும்" ஒன்றாக்கி, மூன்று எனவுங்கால் அது "திரிபுடி" என, மறே அவஸ்தையை கொடுப்பதாகும். அவ்வவஸ்தை, இன்பதுன்பமாம் முடிவுறும். இரண்டு என்ற தன்மையில், பேரின்பம் என்ற, "பேரானந்தம்" என ஆகும். இதுவே பின் ஸ்வய அனுபவத்தில், "பிரம்மானந்தம்" என அவஸ்யம் ஆகும், என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.




(115)

மனிதர்கள்
மிருகங்கள்
பறவைகள்
மீன்கள், பூச்சிகள்
மரங்கள் என எல்லாம்
ஒன்றுமக்கி **நாமா**
வை மட்டும் சொல்வதால்
இட்சும நாமமாட்டும்
வெளிப்படுகிறது. அங்கு
நாம உருவம் மறைந்து நாசமாகிவிடும்!
ரூபம் மண் ஆவதால். அங்கு அது அதுவாகவே
ஆகமுடியும்.

ஆகவே, இரண்டு தேவைதான்! ஆனால் ஒன்றுமட்டும்,
கண்டிப்பாக வேண்டாம்! அது மறை அவஸ்தையையும்,
கொடுக்கும்! அது பிறவிக்கும் வித்து ஆகும்!
(பிரிவினைபடுத்தும்)

(1) பிரிக்கின்ற நாமம் இல்லை! பேதப்படுத்தும், உருவம் இல்லை!
விதவிதமான, எப்பொருள்களும் இல்லை! ஆகவே எங்கும்,
எந்த விதம், நாமரூப, ஜக ஜீவ, தாவர வர்க்கங்களும்,
இல்லவே இல்லை! ஆனால் ஸ்வதந்திரமாய் உள்ளதானது,
ஒன்றே, ஒன்றுதான் உண்டு:— பிரிக்கின்ற நாமம்?
இல்லை என்றால்:— விதவிதமான, பலமரங்களின்
பெயர்களைச், சுட்டிக்காட்டி, அது இன்னது! இது இன்னது!
எனபல "**நாமங்கள்**" சுட்டிக்காட்டாமல்:
பொதுவாக, "**மரங்கள்**" எனசொல்வதில், நாமபேதம் அழிந்து
சுட்டிக்காட்டாமல், நாசமாகும்.

இதைப்போலவே, எந்த இனத்தையும் ↑ ஒட்டுமொத்தமாக,
மனிதர்கள்/ மிருகங்கள்! பறவைகள்! மீன்கள். என
"**ஏகம்**" பிரிக்காமல் காண்பதும்! சொல்வதும்! ஆக
"**நாமங்கள்**" கொடுக்கவாம். நம்மனதிற்கு,
"**ஜீவ**" அனுபவத்தையும், கொடுக்கவாம்!
இதில் **நாமா** கேடும்!






பேதப்படுத்தும், எந்த உருவம் இல்லையென்றால் :-

மனித இனத்தில் "ஜாதி, மதம், இனம், மொழி, நாடு" "ஆண், பெண், இவைகள் மறந்து, இவைகள் இறந்து! "மனிதர்கள்" (மேன்மை படைத்த தன்மையால்) என்றும்! மற்றும் அனைத்திலும், எம்பேதமும் காணாமல், மிருகங்கள், பறவைகள், மீன்கள், ஊர்வன வகைகள் எல்லாம், ஒட்டுமொத்தமாக "ஜீவ" வர்க்கங்கள் என்றும், கருத்தில் புதிய வைத்துக் கொண்டு, உணர்வு பூர்வமாக தாவர வர்க்கங்களையும் சேர்த்து எல்லாம் "மண்" பொம்மைகளே என்றும் பின் அனுபவத்திறல், எல்லாம் "மண்ணே" என்றும், கருத்தில் புதிய வைத்துக் கொண்டு, பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! என உணர்வு பூர்வமாக, நம்மட்டில் உணர்ந்து கொண்டால் "ரூபபேதம்" கெடும்! நல்ல அனுபவத்தையும் கொடுக்கும். புதிய அனுபவத்தையும் கொடுக்கும். இவ்விதமாக, நாம ரூப பேதங்களை கெடுக்கலாம்.

உதாரணமாக ???




J இல்லை என்று "சொல்லும் இல்லை!"
இங்கே இது இப்படி இருக்கிறது என்று "பொருளும்" இல்லை!
ஆனால் வாக்கால், சொல்லிச் சொல்லியே, விளக்கம்
கொடுக்கும் "ஒலி" ஒன்றுதான், தோன்றுகிறது!

சொல்லும் இல்லை, பொருளும் இல்லை என்றால், நாமமும்
ரூபமும்! எங்கான் பொருள்படும்


இதன் உண்மை, எப்படி துலங்கப்படுகிறது என்றால்?
பிரமாணமான உண்மை நாமமும், ரூபமும்!
கொண்ட, எந்த "பொருளும்" மண்ணே
என்றும், மண்ணுக்கு அன்னியம், எதுவும் இல்லை
என்றே, உணர்வு பூர்வமாக, விளங்குகிறது! இதில்
உள்ள "ரகஸ்யம்" என்ன வென்றால்?

ரூபம்:– ஓர் "தாபம்" ஆகும்! அதன் பெயர்"
நாமம்:– ஓர் "சூட்சுமமான ஒலியே"
ஆகும். இதை ஒலிவடிவிலும் சொல்லலாம்!
நாமத்தை " → வரிவடிவிலும் உணர்த்தலாம்!





ரூபத்தை, கண்ணால் காணலாம்! ஆனால்
நாமத்தை, வரிவடிவில், கண்ணால் காணலாம்!
,, , ஒலிவடிவில், காதால் கேட்கலாம்!
ரூபத்தை கேட்க முடியாது! நாமத்தை காண முடியாது!
ரூபத்தை காண்பது, ஒன்றால் தான் முடியும்! ஆனால்
நாமத்தை, காணவும்! கேட்கவும்! முடியும்! இப்படி
இந்த நாம ரூபம் இரண்டுமே, பின்னிப் பிணைந்திருப்ப
தால்தான்! நாமரூப ஜக ஜீவ, க்ஷேத்ரம் அனைத்தையும்
மறக்கவும் முடியவில்லை! மறுக்கவும் முடியவில்லை!
விலக்கவும் முடியவில்லை! விலகவும் முடியவில்லை!
இதில் "மனம்" என்றுவே, நாமரூப பின்னல்!
"நாமரூபம்" என்றுவே, மனதின் பின்னலாகும்!
இதனால் தான், எம் ஸ்ரீ ரிபு மஹாத்மா, சொல் பொருள்
ஓர் அனுபவமில்லை! என சொல்லி! சொல்லையும்
நாமத்தையும் பொருளையும் ரூபத்தையும் சுட்டிக்
காட்டி, இவைகளுக்குள் பேதமாக இல்லவே இல்லை
எனக் கூறியதன் பொருள் ????????????????



சொல்லும் பொருளும், எப்படிப் பிரியலாகும்?

"சொல்" என்றால், அது ஓர் "நாமம்" ஆகும்!
"சொல்" ,, குறிக்கும் ,, "ஒலி" ஆகும்! அது
"நாமம்" ஓர் "பொருள்" அல்ல!
"பொருள்" என்றால், அது ஓர் "நாமம்" ஆகும்!
"பொருள்" ,, ,, காணும் வஸ்து வாகும்!
"பொருள்" என்றால் ஒலியோ! வாக்கோ! வரியோ! அல்ல
ஆனால் அப்பொருளை, ஒலி என்ற வாக்காலோ! வரியாலோ!
உணர்த்தவும் முடியும்! தொட்டுக்காட்டவும், சுட்டி உணர்த்தவும்
முடியும்! இதனால் என்ன உணர்கிறோம் என்றால்?
ஓர் "பொருள்" அதாவது "மண்" மெய்யமானதை
இது இன்னது! இது இதால் ஆனது! இது இன்னது செய்யும்!
என இன்னமும் பல நிலைகளில், வாக்கால் சொல்லியும்,
வரியால் விளக்கியும், தொட்டுக்காட்டியும், சுட்டி உணர்த்தியும்
விளக்கவும், விளங்கவும், துலக்கவும், துலங்கவும் செய்யலாம்.




(120)

ஒலியை கேட்கலாம். வரியை காணலாம். ஆனால் இவ்விரண்டையும் உணர்த்துவது ஒன்றையே! ஒருமண்ணான பொருள் இருநிலைகளில் விளக்கம் பெறுகிறது. விளக்கமும் தருகிறது. இதுமாயா மனதின் வேலையாகும்!


இப்படி மண்ணான, எந்த ஓர் பொருளையும், அது சத்தியமாய்! நித்தியமாய்! விளங்கப்பண்ணுவது; "ஒலியும்! வரியும்!" ஆகும்.

எப்படி மண்ணாய் "பொன்னாக்கியும்!" "பெண்ணாக்கியும்!"

ஓர் நாமரூப பொருளாக்கியும், இதை மண் தானே என உணர ஒட்டாமல், மறைக்கிறது! மறைப்பது "மடமை" ஆகும்! இத்திரையை போட்டதும் மனமே! அத்திரையால் அவஸ்தைப்படுவதும் மனமே! இதற்கு பரிகாரமும்! ஸ்ரீமஹான்களும் பொறுப்பில்லை! மனமே பொறுப்பாகும்! நாமே உணரவேண்டிய இந்த நாமத்தையும் (ஒலியையும்) ரூபத்தையும் (மண்ணையும்) நாம்தான் (மனம்தான்) இல்லையென உணர வேண்டுமே இவ்வாறு வேறு மாற்று மருந்து இல்லை! ஆகவே??????




எல்லாம் "மனனே" மனத்துக்கு அன்னியமாய் "எந்த நாமரூபமும்" இல்லவே இல்லை என்று திடஉணர்வு இருந்தால் மட்டுமே, நாமரூப, ஜகஜீவ, கோடிரூபம் அனைத்தையும், தானே நாசம் செய்ய முடியும் என்றும்; வேறு எந்த சாதனையாலும் முடியவே முடியாதென்றும்; இவைகளுக்கு ஆதாரமாயும் ஆதாரமாயும், இருப்பவன், "ஸ்ரீ பகவான்தானே"? என, மெய்யாகவே உணர்ந்து, அவன் வசம், முன்கூறிய நிலையில், சர்வார்ப்பணம் செய்தால் அன்றி, நாமரூபமும், தொலையாது. அதில் பின்னிய குண தோஷங்களும், நாசமாகாது! இந்த தோஷம் நாசமானால் அன்றி, பிரம்மார்ப்பணம், இயலாது முடியாதென்று உணர்ந்து, சர்வார்ப்பணமும் பிரம்மார்ப்பணமும் முறையாக செய்ய வேணுமென்றும்; இவைகளை செய்யாமல், வேறு எந்த சாதனை செய்தாலும், இக் "கலியுகத்தில்"



"சொல்லும் நாமமும் பொருளும் ரூபமும் அழிந்த ஜீவன் முக்தி பெறமுடியாதென்றும், ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள்.

(2) ஆகவே சொல் அற சும்மாவே இருந்து, மஹா மௌனம் ஆகி, அல்லல் இல்லாத, அகண்டானந்த அனுபவத்திலே, "கருங்கல்போல்!" அதுவே நாம் ஆகி, பிரம்மானந்தம், நாம் என ஆகலாம்!

மேலே கூறிய, இவை அனைத்தும் இயல்பாக கிடைக்க வேண்டுமானால், ஒரே வழி "சொல் அற சும்மா இரு!" சும்மா இரு என்றால் கர்மா பண்ணாமல், சும்மா இரு என்ற பொருள் அல்ல. கர்மாவை பிராப்த தாவத், செய்யலாம்! அச்செய்கை "நான்" அல்ல! "என்னால்" அல்ல! "எனது" அல்ல! நீயே! உன்னால்! உனதே! எனும் பாவனையுடன், சர்வார்ப்பணம், செய்த நிலையில், மனம் மகிழ்ந்த நிலையில்.



தவம் செயலாற்றினால்: வந்த கர்மா மட்டும் முடியும்!

வேறு எந்த கர்மாவும், உன்னை தொடாது. தொடராது!

இதுவே, அம்மா இருக்கும் நிலையாகும்! ஆகவே இன்று,

"வாக்கை குறைப்பதே" (நிறைந்து வதல்.) சாதனையாகும். ஆகவே இன்று.

"அடங்கி" பேசு! "அடக்கப்" பேசாதே! சீ செய்யாதே

அமைதியாக பேசு! ஆக்கிரமாகப் பேசாதே!

அன்பாகப் பேசு! அதிகாரமாகப் பேசாதே!

சுருக்கமாகப் பேசு! விரிவாகப் பேசாதே!

உனக்காகப் பேசு! பிறருக்காக பேசாதே!


உறவு, சுற்றம், நட்பு, இவர்களிடம் பேச்சை குறை!

இன்று "பொறுமை" மிக மிக மிக முக்கியம்.

பிறரை கவனிக்காதே! கண்காணிக்காதே! கண்டிக்காதே!

கவனம்; உன் பொறுமையிலேயே இருக்க வேண்டும்.


இப்பயிற்சியின் அனுபவம், உனக்கே அல்லவா, பிறருக்கல்ல! இதுவே சொல்வது அம்மா இருக்கும் நிலையாகும்!



இதுவே, சர்வசாட்சி நிலையாகிய, அகண்டாண்ம பாவனையாகும்! இந்நிலையில், கருநீ கலியும் போல் இருக்கும் நிலையாகும். இது இந்த நிலையின் அனுபவமே இதுவே **ஸ்வதந்திரம்** பெற்ற நிலை ஆகும்

சுதந்திரம் என்பது, ஜீவத்தன்மை அழிந்த இடம்!
" " பரமாத்மதன்மை " "!
" " பரம்பொருள் நாம் ஆன இடம்!
" " நற்போதமும் நற்புகழும், சூன்யமான இடம்!
" " அகண்டாண்மபாவனையின், முடிவிடம்!
" " அகண்டாகாரம், ஆன இடம்!
" " எம்பாவனையும் இல்லாத பாவனாதீத இடம்!
" " தான் இறந்து தலைவன் ஆன இடம்!

மேலே சொன்ன, இந்த நிலைகளில், எம்பயிற்சியும்! எம் முயற்சியும்! எச்சாதனையும்! பண்ணாமல், அது **அப்பாலே**! பெற்று விட்டால், அதுவே மனோஜயம் ஆன நிலையாகும்!



(29)


# இவ் வேழையின் பளுவையும் தர்மத்தின் பளுவையும் அடங்கு, அடக்காதே

என்பதே அநுபவ தர்மம்!


இவ் வேழை வைத்தியத்தின் வாசகங்களில், சிலதருகிறேம். இதன் ஸ்வய அனுபவமே, உங்களுக்கு சாதனையாக அமையும். அமைய வேண்டும். அமைந்துவிடும்.

(1) ஏதோ ஓர் குற்றத்திற்காக, இதன் அநுவலக மேலாளரும், புரோக்தரும், ஓர் அரைமணி நேரமாவது, தகாத வார்த்தைகளால், அர்ச்சனை செய்வர். அது சமயம், இவ் வேழையின், கூர்ந்த பார்வையானது, அவ்விருவருடைய, ஸ்ரீ பாதார விந்தங்களிலேயே நிலைத்து நிற்கும். அவ்விரண்டும், ஸ்ரீ பகவானுடைய, பத்மபாதமாகவே கருதும். அந்நிலையில்.

கண்ணருவி, கரைபுரண்டு, பெருகி எடுத்தோடும். அதுதுக்கக் கண்ணீரல்ல! அதுஆனந்தக் கண்ணீராகும். அந்த ஆனந்தம், எப்படி ததும்பி வழியும் என்றால்? ஹே ப்ரபோ! ஹே தயாநிதே! கருணா சாகரா! க்ருபா சமுத்திரமே! என்னே உன் கருணை? இவ் வேழையின் மீது, இவ்வளவு கருணையா? அத்தனை பரிவா? அத்தனை இரக்கமா? இந்த அளவுக்கு, உன் கருணையை பெற, இது செய்த பாக்கியம் என்ன?




பொறுமையாக இரு!
அடிக்கொருதரம், பொறுமையாக இரு! எனவே
உபதேசம் செய்வாய். அப்பொறுமையை, எப்படி
கடைப்பிடிக்கிறாய் என, பரிசோதிக்கும் நிமித்தம்,
இருவராக இருந்து கொண்டு உன் அன்பு கருணை மழையை,
கொட்டோ கொட்டென, கொட்டுகிறாயே?
இதற்கு இது, கைமாறு செய்ய முடியுமா? இதற்கு,
ஈடு இணையாக, இவ்வேழை எதைத் தர முடியும்?
இவ்வேழையிடம், அறியாமையால் தேங்கி இருந்த
ஆணவம், அஹங்காரம், மானவமானம், சூடு, சுரணை,
வஞ்சனை, வெட்கம், ஆகிய சாக்கடை தேக்கங்களை,
உன் கருணைப் பிரவாகமாகிய, பெரு வெள்ளம், அடித்து
சென்று, ஆனந்த சாகரத்தில், சேர்த்து விட்டதே!
ஓர் மஹத்தான, உண்மையை, இன்று உணர்ந்து இருக்கிறாய்.
அவ்விருவரிடமும், வாய் இருக்கிறது, பேசுகிறார்கள்.
இதனிடம், காது இருக்கிறது! கேட்கிறது. ஆனால் இங்கு
வாய் திறக்க மறுக்கிறது. இதுவும் உன் கருணையே!
எல்லாம் நீயே! இது உன்னை கருவியே! இது உன்னை
ஆயுதமே! இது உன்னை பதுமையே! உன்னியல்பால்,
இதுக்கு வேறு கதியேது? எல்லாம் நீயே! என்ற முறையீடு
தான், உண்டே தவிர, மறுப்பு வார்த்தையோ! எதிர்
வார்த்தையோ! எதிர்பார்க்கும் வார்த்தையோ!
வர விடாமல், அவன் அடைத்துக் கொண்டான்.
அது அவன் கருணையே! இது ஓர் மணியின் பாடமாகும்.



"விட்டுக் கொடுக்கால், விக்னங்கள் மறையும்!

பலமுறை, இச்சம்பவம், நடைபெற்றிருக்கிறது. பிதாவாயும், குருவாயும், இருக்கும் அந்த ஒன்று, இந்த ஏழையை, கடும் குரலில் அழைத்து, ஏ திருவடி! இந்த நபரிடம்! இந்த இடத்தில்! இன்ன கிழமை! இந்த நேரம்! ஏன் இப்படி பேசினாய்? என்றோ! ஏன் இப்படி செய்தாய்? என்றோ, இது நடுங்கும் நிலையில், கேள்வி கேட்பார்கள். ஒரு சில வினாடிகள், (நிமிஷமல்ல) இந்த ஏழைக்கு, ஒன்றுமே புரியாது, சற்று திகைக்கும். அவருடைய கிருபையினால், மிகுந்த பணிவுடன், சொல்லும் வாசகம்:—

ஐயா! இனி இது, அவ்விதம் பேசாது! என்றோ, ஐயா! இனி இது, அப்படிச் செய்யாது! என்றோ, சொல்லிய வண்ணம், பணிந்து நிற்கும்! அடுத்த சில வினாடிகளில், இனி இது அவ்விதம், பேசாமல் இருக்க, கிருபை சாதிக்க வேண்டும்! என்றோ, இனி இது, அப்படி செய்யாமல் இருக்க, கிருபை சாதிக்க வேண்டும் என்றோ, சொல்லிய வண்ணம், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிடும்.



(128)

அவர் சொல்லும், குற்றம் குறை

முன்/பின்!

நிகழ்ச்சிக்கு காரணமாக அமையும் நம் அவசரத்தால் அது புரியாது! புரிய முடியாது!

சற்று பொறுமை சாதித்தால் அவஸ்யம் புரியும்! பொறுமை! நிதானம்! அவஸ்யம் வேண்டும் இதன்பாடம்.

இப்போ, அவர் சொல்லிய, தினம் அந்த நபரை, பார்த்திருக்கவும் மாட்டோம். பேசியிருக்கவும் மாட்டோம். செய்திருக்கவும் மாட்டோம். ஆனாலும், செய்யாத குற்றத்தை, செய்ததாக, ஒத்துக்கொள்கிறது.

இதனால், இங்கு இதுக்கு, எந்த குறைவு நிறைவு இல்லை.

,, பிதா குருவிடம், எதிர்வாதமும் பண்ணவில்லை.

,, இங்கும் அங்கும், வாக்கு வாதமில்லை!

,, இங்கும் அங்கும், பிரச்சனை முடிவடைகிறது!

,, மன எழுச்சியோ, வீழ்ச்சியோ இல்லை!

,, அடுத்து வரும் நொடிகளில், மனம் அமைதியாகிறது.

,, அவர் வாசகம்:- ஏ திருவடி! உன் அடக்கம் பணிவு!

இவைகளினால், எக்குறையும் வராது நலம் பெறுவாய்.

என்ற இந்த ஆசி! தேவர் மூவர் வாக்கும்! ஸத்குருவின், கருணை மொழியும், ஆசி ஸாந்நித்யம் தரும்!

இதில் வேகத்திலும், ஆக்கிரமத்திலும், எதிர்வாதம் பண்ணினால்?

குறையினால் மனம் புண்படும்! பிதா குரு வாக்கை மீறுகிறோம்! வாக்கும் வழக்கும் வரும்! முடியாத பிரச்சனையாகும்! மன எழுச்சியினால் கொந்தளிக்கும்! சந்தேக கலக்கம் பயம் பயக்கும். இருவருக்கும், இங்கு மனக்கசப்பு தான் உண்டாகும்!

இருகை அசைந்தால் ஓசை! ஒருகை அசைந்தால் ஓசை இல்லை. ஒருவருக்கு ஒருவர், விட்டுக் கொடுத்தால், இருவரும் வாழுவார். விட்டுக் கொடுக்க மறுத்தால், இருவருக்குமே துன்பம் தான்.

பாபா.


ॐ
அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!